Bishop George Rajendran sdb
DIOCESE OF THUCKALAY

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District - 629175
Tamil Nadu, India

## BISHOP'S ENGAGEMENTS
**March 2015**

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sunday | 8.00am-4.00pm<br>5.00pm-8.00pm | Varuthattu: Pastoral visit<br>Pathukani: Mass and blessing |
| 2 | Monday | 11.00am-3.00pm | Changanassery Bishop's house:<br>Deacons' Families Meet |
| 3 | Tuesday | | Rev. Fr. George Maliekal SDB,<br>Provincial of Salesian Silchar Province visits |
| 4 | Wednesday | 6.00pm-7.15pm | Bishop's House Community Meeting |
| 5 | Thursday | 10.00am-12noon<br>1.00pm-3.00pm<br>5.00pm-6.00pm | Varuthattu School: Pastoral Visit<br>Christurajapuram School: Pastoral Visit<br>Meeting for farm products |
| 6-10 | | | Bishop's House |
| 11 | Wednesday | 9.30am-12.00pm | Curia Meeting |
| 12 | Thursday | 2.30pm-5.00pm | Pathukani: School Anniversary |
| 13 | Friday | | Bishop's House |
| 14 | Saturday | 2.00pm-4.00pm | German Students arrive<br>Soosaipuram: Mariyayin Senai Aandu Vizha |
| 15 | Sunday | 8.00am-4.00pm | Arukani: Pastoral Visit |
| 16&17 | Mon & Tue | 9.30am-3.30pm | Kazhuvanthittai MIDS: Priests Orientation Program |
| 18 | Wednesday | 10.00am-12noon | Arukani School: Pastoral Visit |
| 19 | Thursday | 9.30am-12.30pm<br>5.00pm-8.00pm | Thuckalay: Inter-Diocese Meet<br>Kurisumala: Holy Qurbana |
| 20 | Friday | 3.00pm-5.00pm | Kazhuvanthittai: Nambikkai Alayam |
| 21 | Saturday | 9.00am-3.00pm | Kalluvilai: YCL Seminar |
| 22-24 | Sunday | | Bishop's House |
| 25 | Wednesday | 9.30am-12.00pm | Curia Meeting |
| 26 | Thursday | | Bishop's House |
| 27 | Friday | 10.00am-11.00am | Mukkoottukal: Minor Seminary Interview |
| 28-29 | Saturday | | Bishop's House |
| 30 | Monday | 6.30am-8.30am<br>10.00am-12noon | Sangamam: Vestition and Minor Orders<br>Kottar: Recollection |
| 31 | Tuesday | 9.30am-3.30pm | Sangamam: Sanctification Day and Welcome to Most. Rev. Jerome Dhas Varuvel SDB |
| April 1 | Wednesday | 5.30pm-8.00pm | Mankarai: Diaconate Ordination |

*Fr. K. J. Antony SDB*
*Diocese Secretary*

**இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு**
***iraiarultkly@gmail.com***
**செய்திகள் அனுப்ப கடைசி நாள்: 20 மார்ச் 2015**





இறையருள்
IRAIARUL
Volume 19 No : 3 March 2015

*Editorial Board*

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. K.J. Antony SDB**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**

## உள்ளே...

Bishop's Message 2
CBCI Letter 7
இளைஞர் தின திருத்தந்தையின் செய்தி 12
அருட்சகோதரர்களிடமிருந்து... 20
நற்செய்தி நிலையம் 21
குழந்தை ஈசோ இயக்கம் 25
இளைஞர் இயக்கம் (TCYM) 28
தவக்கால தியானம் தகவல் 28
கலக்கல் தளிர் 29
வின்சென்ட் தே பவுல் சபை 30
Birthdays / Feast Days 33
அர்ப்பண வாழ்வு ஆண்டு 34
வரலாறு அறிவோம்-9 36
Bishop's Engagements 40

# Bishop's Message

Dear Fathers,

Greetings in the Lord!

We have begun our Lenten journey: a journey calling us to experience conversion of our heart and closeness to the Father who invites us to return to him.

**An Experience of the Wilderness**

Wilderness is not a place where one settles down to live. You may travel through wilderness but you cannot and must not continue to live there. There you may wander through but it is not your destiny.

Wilderness and wandering experience is not uncommon in the Bible. Our first parents were driven out of Paradise into where nothing would grow except by toil and sweat (Gen 3:23, 24). Cain confessed his guilt saying that he would be hidden from the Lord's presence and will be a restless wanderer (Gen 4:14). Israelites were to offer their first fruits and tithes declaring before the Lord, "'A wandering Aramean was my father…" Israelites themselves were wanderers in the wilderness and were wanderers not for forty days but forty years.

Lent is a beautiful time which calls us to realise where we are. It is not a call to go *into* wilderness in as much as to realise that it is where we already are. We are in wilderness. Do not settle down there. Make the decision right now to move on as did the prodigal son: "I will get up and go to my father (Lk 15:18).

Wilderness is not merely a lack of human habitation, lack of food, or means for living. It is emptiness, where God's presence is not there. Wilderness is when my soul stops perceiving the presence of God, stays on in a desert of ego, filled with brambles of selfishness, pride, lust, envy, gluttony, raging anger, covetousness, and sloth that craves comfort, security, and leisure.

Jesus too underwent this experience of wilderness. His temptations were not different from that of ours. He was a




| | |
|---|---|
| 20/02/2007 | : குருகுல முதல்வர் |
| 29/02/2011 | : மறைமாவட்டப் பரிபாலகர் |
| 16/09/2012 | : குருகுல முதல்வர் |
| விண்ணில் | : 09/02/2013 |

**பொறுப்பில் அருட்தந்தை..**

| | |
|---|---|
| 2002 | இளங்குருமட ஆசிரியர் (Liturgy) |
| 2003 | பங்குத்தந்தை - மஞ்சாலுமூடு<br>சூசைபுரம் மெட்ரிக் பள்ளி தாளாளர்,<br>KCSL & மறைமாவட்ட கத்தோலிக்க பள்ளிகள் தாளாளர் |
| 2005 | மறைமாவட்ட பாடகற்குழு இயக்குநர்,<br>மறைமாவட்ட ஆங்கிலப்பள்ளிகள் ஒருங்கிணைப்பாளர் |
| 2007 | குருகுல முதல்வர் & பங்குத்தந்தை அதங்கோடு |
| 2009 | பங்குத்தந்தை, புனித வின்சென்ட் டி பால் மிஷன்,<br>மார்த்தாண்டம் |
| 2010 | KCSL இயக்குநர் |
| 17.11.2010 | பங்குத்தந்தை, தெற்றிவிளை |
| இயக்குநர் | சங்கமம்,மரியாயின் சேனை, வின்சென்ட் டி பால்,<br>மாதர் ஜோதிஸ் |

இறைவன் அவருக்கு நிலையான அமைதி அளிக்க செபிப்பதோடு தக்கலை மறைமாவட்டம் சார்பாக, 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.



திரு. **ராஜு,**
மஞ்சாலுமூடு.

---

**Pope Francis**
**TWEETS**



**Pope Francis** @Pontifex Feb 17
During Lent, let us find concrete ways to overcome our indifference

"வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" என்ற பவுலடியாரின் வாழ்க்கையே, இவரது வாழ்வாக மாறியதால் தான் தொடர் சாதனைகளால் இவர் சரித்திரம் படைத்தார். 1-2-2013 அன்று சாலை விபத்துக்குள்ளாகி சுய நினைவு இழக்கும் வரை ஓய்வின்றி இயந்திரம் போன்று உழைத்துக் கொண்டே இருந்தார்.

9-2-2013 அன்று அதிகாலை 2 மணிக்கு எர்ணாகுளம் அமிர்தா மருத்துவமனையில் உயிர் பிரிந்தது முதல், 11-2-2013 அன்று அடக்க சடங்கு நடைபெற்றது வரையில் அவருக்கு அஞ்சலி செலுத்தியவர்களின் எண்ணிக்கையே இவரது மாபெரும் பணி வாழ்விற்கு சான்றாகத் திகழ்ந்தது.

4-2-2014 அன்று, முதல் ஆண்டு நினைவு அஞ்சலி திருப்பலி காயல்புறத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் பேரருட் தந்தையை பற்றிய "எளிமையின் அழகு" என்ற புத்தகமும் "தக்கலையின் மார்தோமா" என்ற ஒலி ஒளி நாடாவும் வெளியிடப்பட்டன.

7-2-2015 அன்று, இரண்டாவது ஆண்டு நினைவு நாள் திருப்பலி குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் காயல் புறத்தில் நடைபெற்றது. இவற்றிற்கெல்லாம் தக்கலை மறைமாவட்ட மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு செபித்து சென்ற நிகழ்வு இன்றும் பேரருட் தந்தை பிலிப் கொடியந்தறா அடிகளார் மக்களின் மனதில் வாழ்கின்றார் என்ற மாபெரும் உண்மையை பறைசாற்றுகின்றது.

**அருட்தந்தையின் பிறப்பு முதல்..**

| | |
|---|---|
| பெற்றோர் | : திரு. தேவசியா வர்கீஸ் - திருமதி. தெரேசம்மா |
| பிறப்பு | : 16/07/1960 |
| பள்ளிக் கல்வி | : அமலோற்பவம் மற்றும் தூய ஜோசப் புளிங்குந்நு |
| கல்லூரி | : SB கல்லூரி சங்ஙனாசேரி |
| குருத்துவக்கல்லூரி | : தூய தோமையார், குறிச்சி & தூய தோமையார், வடவாதூர் |
| குருவாக | : 30/12/86 |
| 22.01.1987 | : துணை பங்குத்தந்தை, சூசைபுரம் |
| 15.02.1989 | : பங்குத்தந்தை மாங்கரை, கிள்ளியூர், மாதாபுரம் |
| 16/02/1995 | : இணைப் பங்குத்தந்தை, சூசைபுரம் |
| 08/02/1996 - 98 | : சூசைபுரம், மாங்கரை |
| 26/02/1997 | : மறைமாவட்ட ஆலோசகர் |



human being like any of us. But his victory was in his focus, in his goal, in his destiny. His conquest was when he overcame his wander, dissipation, disorientation, which were prompted both by his flesh and by the Devil. But Jesus was *led* by the Spirit.

Jesus' own desert experience we can understand as an inner journey. It was very much akin to that of Israel's journey in the desert. Jesus was driven into the wilderness immediately after his baptism. Mark says, "The Spirit immediately drove him out into the wilderness" (Mark 1:12). Not that Jesus resisted the Spirit so he was 'driven,' but the urgency of mission required an "urgent cooperation" with the Spirit. Jesus' inner journey in the desert experience meant prioritizing prerogatives and bringing into perspective his life's goal, and strengthening the fidelity unto the one who called him.

**Conversion and Confession**

Israel began their journey after being freed from Egypt. They could have reached the Promised Land in much less than forty or fewer days. The distance was not much. But the Israelites covered the distance in forty years. Exodus became a journey without destination. There was lack of faith in God who led them. They refused to be led by God. They were led by their own whims and desires.

Our season of Lent has fifty days and by all means all our lives need not be spent as Lent. Lent offers us opportunity to examine ourselves, primarily to know whether we are on the right track or we have missed the goal, examine our priorities and the status of our fidelity unto the one who has called us. But an unexamined, dissipated, disoriented life can indeed become an experience of desert of 40 years.

After his return from the desert, the first message of Jesus was: "Repent and believe in the Gospel" (Mk 1:15). Jesus' proclamation of this message was only after taking stock of his own situation of his fidelity to God, his Father.

Like Jesus and John the Baptist, we too are called to be agents of conversion, and agents of Good News. But at the outset

I need to go about changing my own life before I can call for conversion. Who am I to ask my brother to take the speck out his eye when I have a log in my own eye (Mt 7:5)? As a person in flesh and blood, I need to examine myself, take stock of my life.

These days of Lent are meant for our own conversion. We need to seek the forgiveness of the loving Father who awaits our return. Fifty days are more than enough. Let us not make it forty years like the Israelites did. If we take these fifty days seriously, things can be set right within ourselves. Fifty days indeed is a time where we can make minimum of two confessions!

May the Lord, the Bridegroom, when he comes, find us not in darkness outside the wedding hall, but with our lamps burning (Mt 25:1-13), with our hearts ready, clean and pure. Wish you all a blessed time of Lent.

## Some News

### 1. Inauguration of the Year of Consecrated Life

On 1 February 2015 we had the solemn inauguration of the Year of Consecrated Life (YCL) at the Sacred Heart Parish, Padanthalumoodu. At 2.00pm, there was Holy Qurbana presided over by me. It was followed by Cultural programme. Very Rev. Fr. Jose Muttathupadam, VG of Thuckalay, Very Rev. Fr. Solomon, VG of Kottar Diocese, Rev. Sr. Rose Francis DM, Provincial of the Daughters of Mary, Marthandam, and Rev. Fr. Wenceslaus OCD, President of CRI, Mulagumoodu were the other dignitaries present on the occasion.

### 2. Holy Qurbana for Fr. Philip Kodianthara and the Home day at Minor seminary

Fr. Philip Kodianthara, former VG and the Administrator of the Thuckalay Diocese, was fondly remembered on his second death anniversary on 10th of February.

### 3. St. Kuriakose Elias Chavara and St. Evuprasiamma Thanksgiving celebrations

To thank God for the Canonization of the new saints of Syro Malabar Church and for the graces received through their



அப்போதைய சங்ஙனாசேரி பேராயர் மார் ஜோசப் பௌத்தில் அடிகளாரால் குருவாக திரு நிலைப்படுத்தப் பெற்று, ஏற்கனவே குரு மாணவராக களப்பணியாற்றிய குமரி மாவட்டத்தில் குருத்துவ பணியாற்ற வந்து, நம் உள்ளங்களை கொள்ளை கொண்டார். சூசைபுரம், கிள்ளியூர், மாங்கரை, மாதாபுரம், தக்காளிவிளை, மஞ்சாலுமூடு, தெற்றிவிளை, அதங்கோடு, மார்த்தாண்டம் ஆகிய பங்குகளின் தந்தையாக ஆன்மீகத்தின் கருவறையாகத் திகழ்ந்தார். மிஷன்லீக், இளைஞர் இயக்கம், வின்செந்தியர் இயக்கம், மரியாயின் சேனை ஆகிய இயக்கங்களின் இயக்குநராக பல்வேறு கால கட்டங்களில் பணிபுரிந்தார்.

மறைமாவட்டத்தின் அனைத்துப் பள்ளிகளின் தாளாளராய் குருகுல முதல்வராய், பரிபாலகராய் பணியாற்றினார். 26 வருடகால குருத்துவபணி வாழ்வில் மறைமாவட்ட அனைத்து மக்கள் மனதிலும் இடம் பெற்றார்.

'இச்சின்னஞ்சிறு சகோதரர் ஒருவருக்கு செய்தது எல்லாம் எனக்கே செய்தீர்கள்' என்ற இறை வார்த்தையை வாழ்ந்து காட்ட, இரவென்றும் பகலென்றும், மழையென்றும் வெயிலென்றும் பாராமல் ஊனுறக்கமின்றி ஜாதி, மத பேதமின்றி ஆன்மீகப் பணியோடு சமுதாயப் பணியையும் செய்வதில் தனிக் கவனம் செலுத்தினார். தக்கலை மறை மாவட்டத்திலுள்ள எந்த ஒரு நபரையும் பெயர் சொல்லி அழைக்கும் அளவிற்கு அவர்களை நன்கு அறிந்திருந்தார். கல்வி கற்க வசதியற்றவர்களுக்கு கருணையுள்ளம் கொண்டவரிடம் பணஉதவி பெற்றுத் தந்தார். மேலும் வங்கிகளில் லோண் எடுக்க உதவி புரிந்து சென்னை, ஆந்திரா, கர்நாடகா போன்ற நகரங்களில் உயர் கல்வி கற்க வைத்தார்.

வேலை இல்லாதவருக்கு பிற மறைமாவட்ட நிறுவனங்களிலும் மற்றும் வெளி நிறுவனங்களிலும் வேலை கிடைக்கச் செய்ய கையேந்தி நின்று சாதித்தார். குமரியில் வாழும் அரசியல்வாதிகள், இந்துக்கள், இஸ்லாமியர்கள் அனைவருக்கும் இவர் மிக நெருக்கமானவராக மாறினார்.


மறைமாவட்ட கல்வி நிறுவனம் சிறப்பாக செயல்பட அங்கீகாரம் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்கச் செய்ய, அரசு அலுவலகத்தில் கைகட்டி நின்றார். குருக்கள், கன்னியர்கள் பிரச்சனையில் மூத்த சகோதரராகச் செயலாற்றினார்.

## வரலாறு அறிவோம்-9

## பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா

‘‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

“வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்”



Very Rev .Fr. Philip Kodianthara
(Proto Syncellus, Diocese of Thuckalay)

| | | |
|---|---|---|
| Birth | : | 16-7-1960 |
| Ordination | : | 30-12-1986 |
| Demise | : | 09-02-2013 |

“எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பதைவிட எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம்”

இச்சொற்களுக்கு உரிமையாளர், தனது வாழ்வால் மெய்ப்பித்துக் காட்டியவர் எங்கள் மனிதகுல மாணிக்கம் பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா அடிகளார்.

இறைவனின் சொந்த நாடு என போற்றப்படும் கேரள மாநிலத்தின் நெற்களஞ்சியமாகிய ஆலப்புழா மாவட்டத்திலுள்ள குட்ட நாட்டில் வேம்ப நாட்டு காயலின் ஓரத்தில் அமைந்துள்ள புண்ணிய பூமியாகிய காயல்புறத்தில் 16-7-1960 ம் ஆண்டு கொடியந்தறா குடும்பத்தில் திரு. தேவசியா வர்கீஸ், திருமதி. திரேசியம்மா வர்கீஸ் தம்பதிகளின் 4-வது மகனாக பென்னிச்சன் என்ற பெயர் கொண்ட பேரருட் தந்தை பிலிப் கொடியந்தறா அடிகளார் பிறந்தார். 8-12-1967-ம் ஆண்டில் புளிங்குந்நு தூய மரியன்னை ஆலயத்தில் புதுநன்மை பெற்றார். 18-6-1976 -ம் ஆண்டு குறிச்சி தூய தோமையார் இளங்குரு மடத்தில் சேர்ந்து குருத்துவக் கல்வி பெற்று 30-12-1986 அன்று



intercession, the dioceses of the three rites viz., Syro-Malabar, Syro-Malankara, and Latin rites in the Kanyakumari district, took up to organizing a Holy Pilgrimage of the Relics from 15th February 2015 to 22nd February 2015. The pilgrimage covered several of the parishes of the different rites and culminated in Pilankalai, St. Therese of Child Jesus Forane Church with a Solemn Eucharistic Celebration presided over by me, and concelebrated with Most Rev. Peter Remigius, Bishop of Kottar Diocese, and Most. Rev. Vincent Mar Paulos, Bishop of Marthandam Diocese and several priests from all the three dioceses.

### 4. Orientation program

An Orientation Program meant for all the priests of Marthandam and Thuckalay Dioceses will be held at MIDS, Kazhuvanthittai on 16th and 17th March 2015. The programme will begin at 9.00am and will end at 3.30pm on both days. Rev. Fr. George Plathottam SDB, the CBCI Social Communication Secretary will be the animator.

### 5.Sanctification Day and Welcome to Most. Rev. Jerome Dhas Varuvel SDB

On 31st March, we all the priests and religious of the diocese will come together at Sangamam to thank God for the gift of Priesthood and religious life. Most Rev. Jerome Dhas SDB, the Bishop of Kuzhithurai diocese has consented to preach the recollection.

### Information

*This year with 10 students who will go for their Philosophical Studies to Ujjain, Bangalore, and Warangal.

*The Vestition of Br. Abilash and Minor orders of Br. Vinu and Br. Jabanesh will be held on March 30, 2015 at 6.30 am in Sangamam.

*Rev. Fr. Jose Muttathupadam will visit our seminarians studying at Ujjain, Satna between 4th & 12th March.

*This year’s Lenten Collection will be given to Devasahayam Nalvazhvu Nilayam (DNN).

## In Conclusion

We are preparing ourselves for the great feast of the Resurrection. At the end of this month we will be entering into the Holy Week remembering and celebrating the Lord's Passion and Death.

Death precedes Resurrection. Our bodies definitely will one day perish. But our faith says we will participate in the Resurrection of our Saviour. St. Paul declares, "all of us who were baptized into Christ Jesus were baptized into his death" (Rom 6:3). Even when living in our bodies, we are called to die. As disciples of the Lord, we are to take up our daily cross (Lk 9:23). Our old selves are to be crucified with the Lord (Rom 6:6). We are to live as those who have died to sin (Rom 6:2).

During this season of Lent, may I wish all of you dear fathers, a blessed time of spiritual journey with the Lord, into the desert, and also towards Jerusalem, where we will join with him in his Passion, Death and Resurrection.

Yours in Christ Jesus,

**+ George Rajendran SDB**

Bishop of Thuckalay

---

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Feb 8
Jesus is not a figure from the past: he continues now and always to light the way for us.



**Pope Francis** @PontifexFeb 6
Having faith does not mean having no difficulties, but having the strength to face them, knowing we are not alone.



**Pope Francis** @Pontifex Feb 3
We are all sinners. We are all called to a conversion of heart.



## தூய மலர்களின் திருப்பண்ட திருப்பயண நிறைவு விழாவும் நன்றியறிதல் திருப்பலியும்

சீரோமலபார் சபையிலிருந்து புனிதர்களாக உயர்த்தப்பட்ட தூய சாவறா, தூய எவுப்பிராசியாம்மா ஆகியோர்களின் திருப்பண்ட பயண தொடக்கவிழா பிப். 15



அன்று படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்திலிருந்து தொடங்கி குமரி மாவட்டத்தில் செயல்படும் மார்த்தாண்டம், கோட்டாறு, தக்கலை ஆகிய மறைமாவட்ட ஆலயங்கள் வழியாக பயணித்து பிப். 22 அன்று மாலை 7.00 மணிக்கு தக்கலை CMC துறவற இல்லத்தை வந்தடைந்தது. பின்னர் மறைமாவட்ட இளைஞர்களின் 60 இருசக்கர வாகன பேரணியுடன் புறப்பட்டு பிலாங்காலை தூய குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தை வந்தடைய பெண்களின் முத்துக்குடை அணிவகுப்பு மரியாதையுடன் சிங்காரி மேள வரவேற்பும் அளிக்கப்பட்டது. தொடர்ந்து கோட்டாறு, தக்கலை, மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்களுக்கும், CMI துறவற சபையின் பிரதிநிதிகளுக்கும் கும்ப ஆரத்தி வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து குருகுல முதல்வர் அவர்கள் திருப்பண்டத்தை ஆலயத்தில் நிறுவ மூன்று மறைமாவட்ட ஆயர்களின் தலைமையில் திருப்பலியும் நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குருகுல முதல்வர் அவர்கள் வரவேற்புரை கூற சிறப்பு விருந்தினர்கள் குத்து விளக்கேற்றினர். திருவனந்தபுரம் CMI சபையின் மாகாணத் தலைவர் பேரருட்தந்தை சிறியக் மடத்தில் CMIஅவர்களும் CMI சபையின் மாகாணத் தலைவர் பேரருட்தந்தை போல் அச்சாண்டி அவர்களும் வாழ்த்துரையாற்றினார். தொடர்ந்து கோட்டாறு மறைமாவட்ட ஆயர் அவர்கள் சிறப்புரையும், CMC துறவற சபை அருட்சகோதரி சாந்தாள் CMC அவர்கள் வாழ்த்துரையாற்றினார். தொடர்ந்து பாடற்குழுவினர் புனிதர்களின் அருளை வேண்டி பாடல் பாடினர். நிறைவில் பேரருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் அவர்கள் நன்றி கூற மாலை 6.00 மணியுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

## அர்ப்பண வாழ்வு ஆண்டு தொடக்க விழா

2ம் வத்திக்கான் சங்கத்தால் உருவாக்கப்பட்ட மக்களின் ஒளி என்ற ஏடு வெளியிடப்பட்ட 50ம் ஆண்டை சிறப்பிக்கும் ஒரு முயற்சியாக உலக அர்ப்பண வாழ்வு ஆண்டை கொண்டாட நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்ததின் பேரில் தக்கலை மறைமாவட்டம் படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் பிப்ரவரி 1 அன்று மதியம் 2 மணியளவில் அர்ப்பண வாழ்வு ஆண்டு தொடக்கவிழா நடைபெற்றது. ஆயர் அவர்களுக்கு தமிழ் கலாச்சார முறையான கும்ப ஆரத்தி வரவேற்பு வழங்க ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

அர்ப்பண ஆண்டுப் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை பெலிக்ஸ் ச.ச. அவர்கள் அனைவரையும் வரவேற்று பேச, சிறார்கள் பூச்செண்டு கொடுத்து வரவேற்றார்கள். தொடர்ந்து குருகுல முதல்வர் ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் அர்ப்பண வாழ்வு ஆண்டு செபத்தை செபித்து தொடங்கி வைத்தார்கள்.



அருட்சகோதரிகள் துறவறத்தின் மேன்மையை உணர்த்தும் பாடலைப் பாடினார்கள். தொடர்ந்து கோட்டாறு மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை சாலமோன், மார்த்தாண்டம் மறைமாவட்டத்தைச் சார்ந்த DM வட்டார துறவற சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி றோஸ் பிரான்சிஸ், OCD வட்டார துறவற சபைகளின் குழுமத்தலைவர் அருட்தந்தை வென்சஸ்லால், OCD ஆகியோர்களும் வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து மறைமாவட்ட அருட்தந்தையர்கள் ஆயரோடு இணைந்து துறவற ஆண்டின் மேன்மையை உணர்த்தும் “உலகை விழித்தெழ செய்திடும் துறவறம்” என்னும் பாடலை ஆரவாரத்தோடு பாடி மகிழ்வித்தனர். மேலும் அர்ப்பண வாழ்வு வாழ்கின்ற துறவிகளை சிறப்பிக்கவும், இத்துறவற ஆண்டு முழவதும் அவர்களுக்கு செபிக்கவும் வேண்டி மறைமாவட்ட மிஷன் லீக் இயக்க உறுப்பினர்கள் துறவிகளின் பெயர்களை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து கொண்டனர். தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையுரையாற்ற அருட்சகோதரி பிளசி CMC அவர்கள் நன்றி உரையும் ஆற்றினர். இவ்விழாவில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், துறவற சபை அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்களென மொத்தம் 700 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



### இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை கடிதம்

27 ஜனவரி, 2015

அன்பான இறைமக்களே,

இறை இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கங்கள்!

நாம் கடந்த மாதம் 26 ஆம் தேதி, நமது நாட்டின் 66 ஆவது குடியரசு தினவிழாவை கோலாகலமாகக் கொண்டாடினோம். அன்றைய தினம், அமெரிக்க நாட்டு அதிபர் பங்கேற்றது அவ்விழாவிற்கு மேலும் அழகூட்டும் விதமாக அமைந்தது. இவ்வேளையில், கடந்த மாதம் 20 ஆம் தேதி (20.01.2015) அன்று, டெல்லியில் வைத்து நடந்த இந்திய ஆயர் பேரவையின் சிறப்பு ஆலோசனை கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்ட சில கருத்துக்களை உங்கள் முன் வைக்க நான் விரும்புகிறேன். அன்றைய தினம் நடந்த சிறப்புக்கூட்டத்தில், இந்தியாவைச் சேர்ந்த நான் உட்பட்ட நான்கு கர்தினால்கள், மேதகு ஆஸ்வால்ட் கிரேசியாஸ், மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி மற்றும் மேதகு தெலஸ்போர் டீட்டோ, சிபிசிஐ அலுவலக நிர்வாகிகள், இந்திய கத்தோலிக்கச் சங்க அமைப்பின் (சிசிஐ) பிரதிநிதிகள், இந்திய துறவறச் சபைகளின் கூட்டமைப்பின் (சிஆர்ஐ) பிரதிநிதிகள், அகில இந்திய கத்தோலிக்க கூட்டமைப்பின் (எஐசியு) பிரதிநிதிகள், இந்திய கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் (ஐசிஒய்எம்) பிரதிநிதிகள், சட்ட ஆலோசகர்கள், மனித உரிமை மற்றும் சமூக ஆர்வலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த சில மாதங்களாக இந்தியாவில் நடந்து வரும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அசம்பாவிதங்கள் குறிப்பாக, மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், ஒடிஷா, சட்டீஷ்கர் மற்றும் டெல்லி போன்ற மாநிலங்களில் நடந்து வரும் தாக்குதல்கள் பெரும் கவலை அளிப்பனவாக உள்ளன. ஆலயங்கள் சேதப்படுத்தப்படுவதோடு, குருக்களும் பொதுநிலையினரும் தாக்கப்படுகின்றனர். இது சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையாகவே காணமுடியும். இந்தியாவில் மதச்சார்பின்மை கேள்விக்குறி ஆகியுள்ளது. இந்தியாவில் புதிதாக முளை விட்டுள்ள, மறுமதமாற்றம் என்னும் நச்சுவேர் இந்தியாவின் நன்மதிப்பை சிதைக்கும் வகையில் அமைந்துள்ளது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் அழகு. இந்தியா மொழியாலும், மதத்தாலும், கலாச்சாரத்தாலும், பழக்கவழக்கங்களாலும் பன்முகம் கொண்டது. இன்றையச் சூழலில் இது ஆபத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வகுப்புவாதம் முன்வைக்கப்பட்டு, அனைத்தையும் ஒருமுகமாக்கும் முயற்சி மவுனமாய் நடந்தேறுகிறது. இங்கே, பெண்கள்,

தலித்துக்கள், மாற்று மொழி பேசுவோர், வேற்று மதம் அனுசரிப்போர் அனைவரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

தாய்மதம் திரும்புதல் என்னும் பெயரில் நடத்தப்படும் *கார் வாப்சி* நிகழ்வுகள், கல்வியையும் கலாச்சாரத்தையும் ''காவிமயமாக்குதல்'', *இந்து ராஷ்ட்ரா* என்னும் கூச்சல், இவை அனைத்தும் காலங்காலமாக நாம் பேணிகாத்து வரும் இந்தியாவின் மதச்சார்பற்ற பண்பாட்டுக்கு எதிரான தாக்குதல்கள் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. ''காவிமயமாக்குதல்'' என்பது, வரும் தலைமுறைக்கு முன்பாக வைக்கப்படும் அறிவுசார்ந்த அச்சுறுத்தல் என்பதே உண்மை. இங்கே, நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று உண்டு. மதமாற்றம் என்பது, ஒருவருடைய உள்மனம் சார்ந்த சுதந்தரமான தேர்வு. அதை, இந்திய அரசியல் சாசனம் அனுமதிக்கிறது. காரணம், மனிதரின் சுயமாண்பை பாதுகாப்பதே, அரசின் தலையாய கடமை. மதமாற்றம் மனிதரின், சுயம் சார்ந்த மனச்சாட்சியின் வெளிப்பாடு. ஆனால். *கார் வாப்சி* என்பது, ஒரு அரசியல் கட்சியின் செயல்திட்டம்; இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு எதிரான, மதவாத தேசியத்தின் திட்டமிட்ட செயலாக்கம். மதம் மட்டுமே ஒருவரை சிறுபான்மையினராக மாற்றுவதில்லை, மாறாக பொருளாதாரம், சமூக அந்தஸ்து ஆகியவையும் கூட. கடந்த மாதங்களில், திடுதிப்பென கொண்டுவரப்பட்ட அரசாணைகளுக்குள் (Ordinances) விவசாயிகள், மீனவர்கள், தலித்துக்கள், பழங்குடியினர், விளிம்புநிலை சமூகத்தினர் ஆகியோரின் வாழ்வாதாரங்களை அழிக்கும் ஆபத்து அடங்கியுள்ளது என்னும் அச்சம் இன்று பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் தான் விரும்பும் மதத்தில் விசுவசிக்கவும், வழிபடவும், பிரச்சாரம் செய்யவும் இந்திய அரசியல் சாசனம் அனுமதிக்கிறது. பல மதங்களைக் கொண்டது இந்தியா. இங்கே பல மதங்கள் வளர்ந்திருக்கின்றன. அதனால், இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கியத் தலைவர்கள், சாதி, மத, இன வேறுபாடுகளை உள்ளடக்கிய இந்திய சமுதாயத்தில், தனி மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தனிக்கவனம் செலுத்தினார்கள். மதச்சுதந்தரம் என்பது, அடிப்படை உரிமை; அரசியல் சாசனம் அனுமதிக்கும் உரிமை, மேலும் அது ஒரு குடியரசின் பண்புநலன். கிறிஸ்தவ மதம் இந்தியாவில் 2000 ஆண்டுகளாக உள்ளது. கிறிஸ்தவ சமூகம் கடவுளில் நம்பிக்கைக் கொள்வதோடு, மனிதர் நலனில் அக்கறை கொண்டது. கிறிஸ்தவர்கள், கல்வி, மருத்துவம், சமூக மேம்பாடு ஆகியத் துறைகளில் எவ்வித சுயநலமுமின்றி, சாதி மத பேதமின்றி சேவை செய்கிறார்கள்.



## BIRTHDAY'S OF REV. FATHERS

| | | |
|---|---|---|
| FR. JOSEPH SANTHOSH | : | MARCH 03 |
| FR. JOSE EDATTUKARAN MST | : | MARCH 08 |
| FR. METHEW THEKKEKUTT | : | MARCH 15 |
| FR. THOMAS POWATHUPARAMPIL | : | MARCH 15 |
| FR. CHACKO AKKATHARA CMI | : | MARCH 17 |
| FR. THOMAS SATHIANESAN | : | MARCH 20 |
| FR. JOSEPH NEDUMPURAM | : | MARCH 21 |

## FEAST DAY'S

| | | |
|---|---|---|
| FR. JOSEPH SANTHOSH | : | MARCH 19 |
| FR. MALIYIL JOSEPH | : | MARCH 19 |
| FR. MUNDUNADACKAL JOSEPH | : | MARCH 19 |
| FR. NETTAPONGHU JOSEPH | : | MARCH 19 |
| FR. PUTHENPURACKAL JOSEPH | : | MARCH 19 |
| FR. THEKKEKADUMATHIL JOSEPH | : | MARCH 19 |
| FR. THEKKETHALACKAL JINU | : | MARCH 19 |
| FR. THOTTIYIL JOSEPH | : | MARCH 19 |
| FR. VELIKKAKATH JOSEPH | : | MARCH 19 |
| FR. MUTTATHUPADOM JOSE | : | MARCH 19 |
| FR. NEDUMPURATH JOSEPH | : | MARCH 19 |
| FR. ANITHOTTAM JOSEPH | : | MARCH 19 |
| FR. JOSE ALBERT | : | MARCH 19 |
| FR. ARUVIYIL JOSEPH | : | MARCH 19 |
| FR. OTTALANKAL JOSEPH | : | MARCH 19 |

சொற்றொடர்களை வாசித்தார். தொடர்ந்து கையேடுப் பகுதியிலிருந்து சகோதரத்துவம் என்ற பகுதியை சகோதரி ஜெனிஷா அவர்கள் வாசிக்க, கிளைச்சபை இளைஞர் பிரதிநிதி சகோதரர் தினேஷ் எல்லாரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை பைஜூ பேரூர் அவர்கள் தலைமையுரை ஆற்றி, கிறிஸ்துமஸ் கேக் வெட்டினார். இடையிடையே உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. வட்டார சபைத் தலைவர் சகோதரர் ஜஸ்டஸ் அவர்கள் சபையின் வளர்ச்சி பற்றி சிறப்புரை ஆற்றினார். கிறிஸ்துமஸை ஒட்டி ரூ. 500 வீதம் 4 தத்துக் குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்டது. இறுதியில் சகோதரி மோனிஷா அவர்கள் நன்றியுரை கூற இறுதி ஜெபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**பணியில் புதிய கிளைச்சபை தலைவர்கள்**

பிலாங்கரை புனித செபாஸ்டின் ஆண்கள் கிளைச்சபையின் புதிய தலைவராக சகோ. அருள்தாஸ் அவர்கள் 01-02-2015 அன்று பணியேற்றுக் கொண்டார். இவருடன் செயலராக சகோதரர் ராஜரெத்தினம் மற்றும் பொருளராக சகோதரர் அலெக்ஸ் ஆகியோரும் பணியேற்றுக்கொண்டனர்.

பிலாங்கரை புனித செபாஸ்டின் பெண்கள் கிளைச்சபையின் புதிய தலைவியாக சகோதரி ஜெமிபா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இவருடன் செயலராக சகோதரி ஜென்சி மோனிகா மற்றும் பொருளராக சகோதரி லின்சி ஆகியோரும் பொறுப்பேற்றனர்.

**புதிய வட்டார சபை தலைமைப் பணியாளர்கள்**

ஆறுகாணி மற்றும் பிலாங்காலை வட்டாரசபைகளின் புதிய தலைமைப் பணியாளர்களாக முறையே சகோதரர் சுந்தர் ஜோஸ் மற்றும் சகோதரர் சக்கரியா ஆகியோர்கள் 08-02-2015 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இவர்களது பணி சிறக்க மத்தியசபை தலைவர் மற்றும் அனைத்து வின்செந்தியர்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறோம். கடந்த 6 ஆண்டுகளாக சிறப்புடன் பணியாற்றிய ஆறுகாணி வட்டார சபைத் தலைவர் சகோதரர் செபாஸ்டியான் மற்றும் பிலாங்காலை வட்டார சபைத் தலைவர் சகோதரர் ஜேம்ஸ் ஆகியோருக்கு மத்திய சபை சார்பில் நன்றியும், பாராட்டுகளும்.

சகோ. சுரேஷ்குமார்
செய்தித்தொடர்பாளர்.



இந்தியாவைத் தாய் நாடாகக் கொண்ட இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் இந்தியாவில் பாதுகாப்பாக உள்ளோம் எனும் உணர்வை இந்திய அரசாங்கம் எங்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட காரியங்களைக் குறித்து நாங்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். மேற்குறிப்பிட்ட ஆபத்து மிகுந்த நச்சுவேர்களை களைதல், இந்தியாவின் ஏற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. பல்வேறு மதங்களையும் கலாச்சாரங்களையும் கொண்ட மக்கள் எவ்வித அச்ச உணர்வும் இன்றி நல்லிணக்கத்துடன் அமைதியாக தாய்நாட்டில் வாழ ஏதுவானச் சூழல் இங்கே நிலவ வேண்டும். இந்தியாவின் முன்னேற்றத்தில் எங்களுடைய பங்கு என்றுமே இருக்கும், இதில் மாற்றமில்லை. ஆனால், சிறுபான்மையினருக்கு எதிராக நடந்தேறும் அசம்பாவிதங்களைத் தடுத்து நிறுத்தும் விதமாகவும், மந்திரி சபையிலும், அரசியல் கட்சியிலும், முக்கிய பொறுப்புக்களில் இருக்கும் நபர்கள், பொறுப்பற்ற முறையில் விடுக்கும் அறிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகவும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறோம்.

ஆலோசனைக் கூட்டத்தின் போது முன்வைக்கப்பட்ட திட்டங்களையும் பரிந்துரைகளையும் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

1. ஏழையர் மீதும் துயருறுவோர் மீதும் திருச்சபை எப்போதும் கருணை கொண்டுள்ளது. ஏழைகளுக்கு சேவை செய்வதை முதன்மையான பணியாகக்கண்டு, திருச்சபை செயலாற்றி வந்துள்ளது. இதையே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் அறிவுறுத்தி வருகிறார்கள். இவ்வேளையில், சமுதாயத்தின் பிற்படுத்தப்பட்ட சமூகங்களிலிருந்து கிறிஸ்தவர்களாக உள்ள, தலித்துக்கள், பழங்குடியினர் ஆகியோரை பாதுகாக்க வேண்டியது நமது மிகப்பெரிய கடமையாக உள்ளது.

2. இன்றைய இந்திய சமுதாய அரசியல் சூழலில், பல்வேறு கிறிஸ்தவ சமூகங்களுக்கு இடையேயும், மறைமாவட்டங்கள் மற்றும் பங்குகளுக்கு இடையேயும் மேம்பட்ட ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது.

3. திருச்சபைக்கும் சமூகத்திற்கும் எதிராக எழுந்துள்ள சவால்களைக் குறித்து பொதுநிலையினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, அதை எதிர்கொள்வதற்கான செயல்திட்டங்களையும் அவர்களோடு இணைந்து வகுத்து செயல்முறைப்படுத்த வேண்டும். இதைக்குறித்த, விழிப்புணர்வை, பெண்களிடையேயும் இளைஞர்களிடையேயும் உருவாக்க வேண்டும்.

4. இந்திய அரசியல் சாசனம் முன்வைக்கும், ஒற்றுமை, சகோதரத்துவம், மதச்சார்பின்மை, சகிப்புத்தன்மை, அமைதி மற்றும் நீதி போன்ற பண்புகளை இளையோரின் மனங்களில் கல்வி மற்றும் பல்வேறு சமூக ஈடுபாடுகள் மூலமாக வேர்விடச் செய்வதன் வழியாக, அவர்களை நற்குடிமகன்களாகவும், விசுவாசமுள்ள சபை உறுப்பினர்களாகவும் மாற்ற வேண்டும்.

5. திருச்சபையின் மனநிலையினின்று விலகாமல், இச்சவால்களை ஆக்கபூர்வமாக எதிர்கொள்ள நாம், ஊடக நண்பர்களையும், சமூக ஆர்வலர்களையும், பிற நிபுணர்களையும், ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மனித உரிமைகளுக்கு எதிரான, விதிமுறை மீறல்களுக்கு எதிரான செயல்பாடுகளில், நல் உள்ளம் கொண்டவர்களோடு இணைந்து செயலாற்ற வேண்டும்.

6. மறைமாவட்ட, மண்டல மற்றும் தேசிய வாரியான கிறிஸ்தவ மக்கள்தொகை மற்றும் நிறுவனங்கள் குறித்த தகவல் தரவு நமக்கு இருக்க வேண்டும். அவை திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காவும் நம்மால் சரியான முறையில் பயன்படுத்த இயலும்.

7. அறிவுசார் சிந்தனைக் குழுக்களை (think tank group) பங்கு, மறைமாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய அளவில் அமைத்து, சமூக அரசியல் சூழல்களை ஆராய்வதோடு, சவால்களை பட்டியலிட வேண்டும். இவற்றைக் குறித்த சிந்தனைத் தெளிவை இக்குழுக்கள், திருச்சபைத் தலைவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். மறைமாவட்ட, மாகாண மற்றும் தேசிய அளவில் செய்தித்தொடர்பாளர்கள் அவசியம். அவர்கள், சமூக நிகழ்வுகளைக் குறித்த சபையின் கருத்துக்களைப் பதிவு செய்வதோடு, சமூகத்தோடு ஆரோக்கியமான உறவை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

8. பங்கு, மறைமாவட்டம், மாகாணம் மற்றும் தேசியம் ஆகிய நிலைகளில், ஒருமித்த செபங்களை மேற்கொள்ள வேண்டும்.

இவைத்தவிர வேறு பல பரிந்துரைகளும் அன்றைய தினம் முன்வைக்கப்பட்டன. இவற்றை நடைமுறைப்படுத்த நம்மால் இயன்றவை செய்ய வேண்டும். விழிப்போடு இருத்தல், ஒருமித்த செயல்பாடு, இறைபராமரிப்பின் மீதான ஆழமான விசுவாசம் மேலும் திருச்சபையை நிறுவி, தீமையின் சக்திகள் வெற்றி கொள்ளாது என வாக்குறுதி அளித்த நம் ஆண்டவரின் மீதுள்ள அசையாத நம்பிக்கை ஆகியவை இக்கூட்டத்தில் அழுத்தமாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களாக இருந்தன.

கிறிஸ்தவர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக, துன்பங்களுக்கு உள்ளாகி இருக்கும் எமதருமை அன்பு சகோதரர் சகோதரிகளோடு, இந்தியத் திருச்சபை தமது ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. உங்களது



மத்திய சபையின் துணைத்தலைவர் சகோதரர் சௌந்தர் ராஜ் அவர்கள், வின்செந்திய பணியை நாம் செய்யும் போது நன்மையை எதிர்பார்த்து செய்யக் கூடாது எனவும், வாழ்நாளில் ஒருநாள் நாம் நன்மை செய்யாவிட்டாலும் அது ஒரு பெரிய இழப்பு என்றும், நம் எதிர்பார்ப்பு இம்மண்ணுலகை சேர்ந்ததாக இல்லாமல் விண்ணுலகை சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். மத்திய சபையின் செயலர் சகோதரர் எட்வின்சன் அவர்கள், தலைவர் பதவியில் செயல்படும் போது நல்ல வழிகாட்டியாக செயல்பட வேண்டுமெனவும், தலைமைத்துவ பொறுப்பு என்பது குறுகிய காலம் மட்டுமே. நாம் எப்போதும் வின்செந்தியர்களே பணி செய்பவர்கள் என்பதை மனதில் வைத்து பணி செய்ய வேண்டும் என்றும் உரையாற்றினார். முந்தைய தலைவர் சகோதரர் ஜேம்ஸ் அவர்களுக்கு அளித்த அனைவரது ஒத்துழைப்பிற்கும் நன்றி கூறினார். புதிய தலைவர் ஏற்புரை வழங்கினார்.

இவ்விழாவின் இடையிடையே கிளைச்சபையின் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்வாண்டுவிழாவிற்கு கிளைச் சபைகளிலிருந்து 32 பேர் கலந்து கொண்டனர். இறுதியாக இவ்விழாவானது இறுதி ஜெபத்துடன் இனிதே நிறைவடைந்தது.

**கிறிஸ்துமஸ் விழா**

பள்ளிக்கோணம் கிளைச்சபையின் கிறிஸ்துமஸ் விழாவானது



21/12/2014 அன்று பள்ளிக்கோணம், திரு இருதய ஆலயத்தில் காலை 11.30 மணிக்கு ஆன்மீக ஆலோசக அருட்தந்தை பைஜு பேரூர் அவர்கள் தலைமையில் கோலாகலமாக கொண்டாடப் பட்டது. சிறப்பு விருந்தினர் களாக களியல் வட்டார சபைத்தலைவர் சகோதரர். ஜெஸ்டஸ் அவர்கள் கலந்துகொண்டார். ஆரம்ப ஜெபத்தை தலைவர் சகோதரர் ஷாஜன் அவர்கள் படித்தார். சகோதரி அனிஷா அவர்கள் 1கொரி. 13:1-5 வரையிலான இறைச்

# புனித வின்சென்ட்-தே-பவுல் சபை

### திட்ட உதவி வழங்குதல்

பிலாங்கரை புனித செபாஸ்டின் பெண்கள் கிளைச்சபையின் 10-வது திட்ட உதவி வழங்கும் நிகழ்வு 14-02-2015 சனிக்கிழமை அன்று அருட்தந்தை. ஆன்றணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செபத்துடன் தொடங்கிய இந்நிகழ்வில் சகோதரர் அருள்தாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மொத்தம் 23 பயனாளிகளுக்கு ரூ. 1,15,000 மதிப்பிலான உதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார சபை தலைவர் சகோ. லாறன்ஸ் மற்றும் திட்ட கண்காணிப்பாளர் சகோ. ஷிபுமோன் மற்றும் கிளைச்சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிக்கோணம் புனித மரியாள் மகளிர் கிளைச்சபை சார்பில் இரு மாணவர்கள், ஒரு கால் ஊனமுற்றவர் மற்றும் ஒரு நோயாளி ஆகியோருக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுக்கு அருட்தந்தை பைஜு பேரூர்கர அவர்கள் தலைமை தாங்கினார். களியல் வட்டார சபை தலைவர் சகோதரர் ஜஸ்டஸ் அவர்கள் முன்னிலை வகித்தார். கிளைச் சபை தலைவி சகோதரி பேபி உட்பட கிளைச்சபை உறுப்பினர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### வட்டார சபை ஆண்டுவிழா

பிலாங்காலை வட்டார சபையின் 2015-ம் ஆண்டிற்கான ஆண்டுவிழாவானது 8/02/2015 அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இவ்வாண்டுவிழாவின் தொடக்கத்தில் காட்டாத்துறை பங்கு தந்தை அருட்தந்தை. ஷெபி அவர்களால் ஆராதனையும் தியான உரையும் நடத்தப்பட்டன.

கூட்டத்தின் தொடக்கத்தில் வட்டார சபையின் புதிய தலைவர் பதவியேற்பு விழா நடைபெற்றது. புதிய தலைவராக சகோதரர். சகரியா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய சபையின் தலைவர் சகோதரர் ஐயாதுரை அவர்கள் பதவி பிரமாணம் செய்து வைத்தார். வட்டாரசபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை. லூக்கா கொல்லம்பறம்பில் அவர்கள், வின்சந்தியர்களாகிய நம்மிடம் நற்கருணை பக்தி இருந்தாலே பிறரிடம் இரக்கம் காட்டும் தன்மை வளரும் என்றும், வின்செந்தியர்களின் அடிப்படை பண்பு அன்பும் இரக்கமும் ஆகும் என்றும் இதற்கு நற்கருணையே நமக்கு உதவியாக இருக்கும் என்றும் இந்நற்கருணையின் வழி இறைவனுடைய இரக்கம் நம்மில் வெளிப்படும் என்றும் ஆன்மீக உரையாற்றினார்கள்.



துன்பங்களில் நாங்கள் உடனிருக்கிறோம், உங்களது கவலைகள் நமது கவலைகள், உங்களது வேதனைகள் நமது வேதனைகள்.

நாங்கள் இந்நாட்டின் குடிமக்கள். இதன் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக நாங்கள் தொடர்ந்து உழைப்போம். எங்களுக்கு எதிராக எழுந்துள்ள, அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து, திருமுழுக்கின் மூலம் வாழ்வில் ஏற்ற இறையாட்சிப் பணியிலிருந்து அஞ்சி விலகமாட்டோம். நமது விசுவாசத்தை இணைந்தே உறுதிப்படுத்துவோம். நாங்கள் அரசியல் கட்சிகளின் சித்தாந்தங்களுக்கு அடிபணிவதில்லை, மாறாக, இந்நாட்டின் அரசியல் சாசனம் அனுமதிக்கும் புனிதமிகு பண்புகளான, மதச்சுதந்தரம், அடிப்படை உரிமைகள், மக்களாட்சி ஆகியவற்றிற்கு அடிபணிகிறோம். எங்களது விசுவாசத்திற்காகவும், நாட்டின் உயரிய வளர்ச்சிக்காகவும், திருச்சபையின் பொறுப்புமிக்க உறுப்பினர்கள் என்னும் வகையிலும், இந்நாட்டின் நம்பிக்கைக்குரிய குடிமகன்கள் என்னும் முறையிலும் எங்களது உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளோம். எவ்வித அச்சுறுத்தலுக்கும் நாங்கள் தாழ்ந்துப் போக மாட்டோம், இறை ஆற்றலால் ஊக்கம் பெற்றவர்களாக விசுவாசத்தைக் காத்து இந்நாட்டின் மதச்சார்பற்ற நிலையை உறுதியாக உயர்த்திப் பிடிப்போம்.

மனிதரை தமது சாயலில் படைத்த எல்லாம் வல்லக் கடவுள் தமது மகன் இயேசு கிறிஸ்துவின் பணியைத் தொடர தமது தூய ஆவியை அனுப்பி நம்மை ஆசீர்வதித்து வலுப்படுத்துவாராக. அன்னை மரியா நமக்காக பரிந்துரை புரிவாராக.

எனது செபங்களையும் அன்பையும் உங்களுக்கு வாக்களிக்கிறேன்.

இறை இயேசுவில் அன்புடன்,

**பசேலியூஸ் கார்டினல் கிளீமிஸ்**

மேஜர் ஆர்ச் பிஷப் கத்தோலிக்கோஸ்

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர்

**Pope Francis**

**TWEETS**



**Pope Francis** @Pontifex Feb 17
During Lent, let us find concrete ways to overcome our indifference



**Pope Francis** @Pontifex Feb 16
Jesus came to bring joy to everyone in every age.

## முப்பதாவது உலக இளைஞர் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி 2015

“தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” (மத் 5: 8)

அன்புமிகு இளைஞர்களே,

2016 ஆம் ஆண்டு ஜூலையில் போலந்து நாட்டில், கிராக்கோவில் நாம் நடத்த இருக்கும் அகில உலக இளைஞர் தினம் குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதற்கான தயாரிப்பை நாம் ஏற்கனவே தொடங்கி இருந்தோம். இவ்வாண்டும் தொடர்வோம். நம்மையே தயாரிக்கும் விதம் சிந்தனைக்காக நற்செய்திப்பேறுகளை எடுத்திருந்தோம். "எளிய உள்ளத்தோர் பேறுபேற்றோர்" என்னும் நற்செய்திப் பேறினைக் குறித்து நாம் கடந்த ஆண்டு சிந்தித்தோம். இவ்வாண்டு நாம் ஆறாவது நற்செய்திப் பேறான, "தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்; எனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத் 5:8) என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

### 1. மகிழ்ச்சியாக வாழ ஆசைப்படுவோம்

மலைப்பொழிவின் தொடக்கத்தில் காணும், நற்செய்திப் பேறுகளில், "பேறுபெற்றோர்"அல்லது "மகிழ்ச்சி" என்னும் சொல்லை ஒன்பது முறைக் காண்கிறோம் (மத் 5 1-12). மகிழ்ச்சியாக வாழ ஆண்டவர் அழைக்கிறார். இது ஆண்டவர் விடுக்கும் சவால்! மகிழ்ச்சியாக வாழ ஆண்டவர் விடுக்கும் சவால்!! அழைப்பை ஏற்று, அவர் கரங்களைப் பற்றிக் கொண்டு மகிழ்ச்சியின் பாதையில் முன்செல்ல நாம் தயாரா?

மகிழ்வுடன் வாழ்வதற்கானத் தேடல் புதிதல்ல, அது தலைமுறைகளின் தேடல் எனலாம். காரணம், மனித மனதிற்குள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கான ஏக்கம் புதைந்துள்ளது. அதனால், உள்மனம் நிம்மதியற்றதாய், மனநிறைவு அடையும் வழிகளை அன்றாடம் தேடிய வண்ணம் இருக்கிறது.

கடவுளோடும், பிறரோடும், இயற்கையோடும், முழு உறவில், மகிழ்ச்சியாய் வாழ்ந்த மனிதரைக்குறித்து தொடக்க நூல் நமக்கு படம்பிடித்துக் காட்டுகிறது. மனிதர்கள் தங்களுக்குள் நிறைவுடன் இருந்தனர். படைப்பின் தொடக்கத்தில், கடவுளை நெருங்கிச் செல்லவும், இயல்பாய் பேசவும் பழகவும் மனிதரால் இயன்றது. அதுவே கடவுளின் திட்டமாகவும் இருந்தது. அங்கே மாசற்ற உறவு ஒளிவு மறைவின்றி, மிகச்சாதாரணமாய் இருந்தது. உறவுகளுக்கு இடையே முகமூடிகள் இருக்கவில்லை.

ஆதாமும் ஏவாளும் இச்சையின் சோதனைக்கு உடன்பட்டனர்; பாவமும் உட்புகுந்தது. அதன் விளைவாக, கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இருந்த உறவின் பிணைப்பில் பிளவு உருவாயிற்று; அன்புறவில்



## கலக்கல் தளிர் 2015

கன்னியாகுமரி சமூகசேவை சங்கத்தின் கீழ் செயல்படும் நர்சரி பள்ளிகளுக்கான கலாச்சார விழா பிப்ரவரி 27 அன்று கல்லுவிளை அலுவலகத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமானது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் விழாவை தொடங்கி வைத்து உரையாற்றினார். குழுநடனம், குழுப்பாடல், கதை சொல்லுதல், ஓவியம் வரைதல், கண்காட்சிப் பொருட்கள் போன்ற பல்வகை போட்டிகள்



நடைபெற்றன. வாறுதட்டு தூய சவேரியார் பாலர்பள்ளி 18 புள்ளிகளை பெற்று முதலிடத்தையும், நித்திரவிளை ஜெயமாதா பாலர்பள்ளி 16 புள்ளிகளும், மாறப்பாடி தூய தோமையார் பாலர்பள்ளி 15 புள்ளிகளும் பெற்று தலா 2ம் மற்றும் 3ம் இடத்தையும் பிடித்தன. 40 வது ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற கண்காட்சியில் மாறப்பாடி தூய தோமையார் பாலர்பள்ளி, குந்நுவிளை தூய சூசையப்பர் பாலர்பள்ளி, அதங்கோடு தூய மரியகொரற்றி பாலர்பள்ளிகள் தலா முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெற்றன. தொடர்ந்து நிறைவு விழா மதியம் 3.00 மணியளவில் மறைமாவட்ட நிதிக்காப்பாளர் அருட்தந்தை. மாத்யூ முளங்ஙாசேரில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை. சஜி எலம்பாசேரில், பாலர்பள்ளிகள் ஒருங்கிணைப்பாளர் அருட்சகோ. மரியா SDS ஆகியோர் வெற்றி பெற்றோருக்கான பரிசுகளை வழங்கினர். தொடர்ந்து தேசிய கீதம் பாட ‘கலக்கல் தளிர்’ மாலை 4.15 மணிக்கு நிறைவடைந்தது.

அருட்தந்தை **சஜி எலம்பாசேரில்,**
இயக்குநர்.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**வாழ்வியல் பயிற்சி**

**பிப்ரவரி 8 ஞாயிறன்று மறைமாவட்ட அளவில் இளைஞர்களுக்கான ஒருநாள் வாழ்வியல் பயிற்சி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை 'அன்பும் நட்பும்' என்ற சிந்தனையில் சென்னை வெளிச்சம் இயக்குநர் திருமதி ஷெறின் அவர்களால் நடத்தப்பட்டது. 65 இளைஞர்கள் பங்கேற்று பலனடைந்தனர்.**

**செயற்குழு கூடுகை**

**மறைமாவட்ட இளைஞர் இயக்க செயற்குழு கூடுகை மார்ச் 1 ஞாயிறன்று படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய அரங்கில் இயக்குநர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூடுகையில் பல்வேறு செயல் திட்டங்கள் பற்றி தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.**

**அருட்தந்தை பெலிக்ஸ்,**
**இயக்குநர்.**

## இளைஞர்களுக்கான தவக்கால தியானம்

இன்றைய நவீன உலகில் இளையோரை ஆன்மீகத்தில் ஆற்றுப்படுத்தவும், ஆற்றல்படுத்தவும் வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் கருத்தில் கொண்டு, தக்கலை **சங்கமத்தில் வைத்து மார்ச் 13 மாலை 4.00 மணி முதல் 15 மாலை 4.00 வரை** 3 நாள் தியானம் நடைபெறுகிறது. அனைத்து இளைஞர்களும் பங்கேற்க அன்பாய் அழைக்கிறோம்.

## வின்செந்தியர்களுக்கான தவக்கால தியானம்

நாள் : 22-03-2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை
இடம் : திருஇருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு.

தக்கலை மத்திய சபை சார்பில் நடத்தப்படும் இத்தியானத்திற்கு தாங்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆன்மீக மறுமலர்ச்சி அடையும்படி அன்புடன் அழைக்கிறோம்.

**குறிப்பு:**

*வின்செந்தியர்கள் அனைவரும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்.
*தியானம் முடிந்த பின்னர் கிளைச்சபை தலைவர், செயலர், பொருளர் ஆகியோருக்கான சிறப்புக் கூட்டம் நடைபெறும்.



விரிசலும் உண்டானது (காண் தொ.நூ. 3). அது, இயற்கையோடான உறவை பாதித்தது; சக மனிதர்களோடான உறவை பாதித்தது. அது தொடங்கி, கடவுளை நெருங்கும் திறனை இழந்தோம். ஆணும் பெண்ணும் தங்களையே மூடி மறைக்கத் தொடங்கினார்கள், தங்களது, நிர்வாணத்தை இலைகளால் மறைக்க முயன்றனர். கடவுளிடமிருந்து வரும் மேலான வெளிச்சத்தை இழந்த அவர்கள், விழிகள் அழகிழந்து, தங்களைச் சுற்றி இருந்தவற்றை அசிங்கங்களாகப் பார்க்கத் தொடங்கினர். மகிழ்ச்சியை நோக்கி தங்களை வழிநடத்தும் கடவுளின் வெளிச்சத்தை இழந்த அவர்கள், செல்வத்திலும், அதிகாரத்திலும், சிற்றின்பங்களிலும் தங்களுடைய வாழ்வைத் தொலைக்கத் தொடங்கினார்கள். சோகமும், துன்பமும் அவர்களது வாழ்வைத் தொற்றிக் கொண்டன.

"எது மகிழ்ச்சி தரும்? எனக் கேட்பவர் பலர். ஆண்டவரே, எங்கள்மீது உமது முகத்தின் ஒளி வீசும்படிச் செய்தருளும்" (தி.பா. 4:6). மனிதரின் இந்த ஏக்கத்தை கண்ணுற்ற, நலன்களின் ஊற்றான தந்தைக் கடவுள் தம் மகனை அனுப்பினார். இயேசுவில் தந்தைக் கடவுளின் முகம் வெளிப்பட்டது. தமது, மானிட பிறப்பு, வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் வாயிலாக இயேசு நம்மை பாவங்களின்று விடுவித்து மகிழ்ச்சிமிகு வாழ்வின் விந்தையான உலகை நம்முன்னால் திறந்து வைத்தார்.

அன்பான எனதருமை இளைஞர்களே, நீங்கள் தேடும் நலமும் மகிழ்ச்சியும் இறை இயேசுவில் முழுமை அடைகிறது. உள்மனதின் ஏக்கங்களை தீர்க்க வல்லவர் இயேசுவன்றி வேறெவரும் இலர். இதை அறியாமல் நாம் பல வேளைகளில், ஏமாற்றங்கள் நிறைந்த உலகின் இன்பங்களில் மூழ்கிப்போவதுண்டு. இதை வலியுறுத்தும் வகையில், புனித இரண்டாம் ஜான் பால் பின்வருமாறு கூறுகிறார், "உங்களை ஈர்க்கவல்ல அழகு இயேசுவுக்கு உண்டு. நிம்மதி குலைக்கும் போலி இன்பங்களில் தொலைந்து போகாமல் தடுத்து நிறுத்தி, உண்மையான மனநிறைவைத் தேடிச் செல்லும் தாகத்தை உங்களுக்குள் உருவாக்கியவரும் அவரே. போலி வாழ்வின் முகத்திரைகளைக் கிழித்தெழிய உள்ளுந்துதல் தருபவரும் அவரே. நேரிய வாழ்வை பின்செல்ல உள்மனம் மேற்கொள்ளும் தீர்மானங்களை வாசித்து அறிபவரும் அவரே. மேலான காரியங்களை செய்வதற்கான ஆவலை உள்ளத்தில் தூண்டியெழுப்புபவரும் இயேசுவே".

**2. "தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்..."**

இந்நற்செய்திப் பேறு வாழ்வில், உள்ளத்தூய்மை எங்ஙனம் சாத்தியமாகும் என்பதைக் குறித்து சற்று விளக்கமாகப் பார்ப்போம். முதலில், உள்ளம் அல்லது இதயம் என்பதற்கு விவிலியத்தின் வழி நின்று பொருள்

காண முயல்வோம். இதயம் என்பதை, உணர்வுகள், சிந்தனைகள், நோக்கங்கள் ஆகியவற்றின் இருப்பிடமாக எபிரேயர்கள் கண்டார்கள். “மனிதர் வெளித்தோற்றத்தைப் பார்க்கின்றனர், ஆனால் கடவுளோ, இதயத்தைப் பார்க்கின்றார்” (காண் 1சாமு 16: 7) என விவிலியம் நமக்குக் கூறுகிறது. இதிலிருந்து, இதயத்தின் (உள்ளத்தின்) மூலம் நாம் இறைவனைக் காண இயலும் என்பது நமக்கு புலனாகிறது, ஏனெனில், இதயம் என்பது, உடலும் உள்ளமும் இணையும் இடம், அங்கே மனிதர்கள் தங்கள் முழுமையைக் காண்கிறார்கள், இதயம் அன்பை ஏற்கிறது, அன்பைக் கொடுக்கிறது.

மத்தேயு நற்செய்தியாளர், தூய்மையைக் குறிக்க, “கத்தாறோஸ்” என்னும் கிரேக்கச் சொல்லைப் கையாள்கிறார். இதற்கு, சுத்தம், தூய்மை, மாசறுநிலை போன்ற அர்த்தங்களைக் கொள்ளலாம். ஆனால், பொருட்களையும், மனிதர்களையும் தொடாமல் (தொழுநோயாளிகளையும், அந்நியர்களையும்) தீட்டென ஒதுக்கி வைக்கும் சடங்கு சார்ந்த, வெளித் தூய்மையைக்குறித்த புரிதல்களை இயேசு முற்றிலுமாகப் புறக்கணித்தார். பரிசேயர்கள், அக்காலத்தைய பிற யூதர்களைப் போன்று, பாத்திரங்களை தூய்மைப் படுத்தும் விதமாக பல சடங்குகளை மேற்கொண்டார்கள், அதன் பின்னரே உணவு உண்டனர். இதைக் கண்ணுற்ற இயேசு ஆணித்தரமாக் கூறுகிறார், "வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத்தூண்டும் தீய எண்ணெங்கள் வெளிவருகின்றன” (மத் 7: 15, 21-22).

இதயத்திலிருந்து எழும் இம்மகிழ்ச்சி எதற்குள் அடங்கியிருக்கிறது? ஒருவரை தீட்டுப்படுத்தும் காரியங்களைக் குறித்து இயேசு முன்வைக்கும் பட்டியலை ஆராயும் போது, இக்கேள்விக்கான பதில், பிறரோடான உறவைச் சார்ந்ததாய் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. ஒவ்வொருவரும், தங்களுடைய உள்ளத்தை எது தீட்டுப்படுத்துகிறது என்பதைக் குறித்துப் ஆய்ந்து அறிதல் அவசியம். மேலும், மனசாட்சியை நேரியதாகவும், உணர்திறன் பெற்றதாகவும் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். அம்மனசாட்சி, “கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிந்து, எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதை உங்களுக்குத் தெளிவாக உணர்த்தும்” (உரோ 12: 2). இயற்கையையும், காற்றையும், நீரையும் உணவையும் நாம் தூய்மையாய் காக்க வேண்டும். ஆனால், இதை விட பன்மடங்கு அதிகமாக இதயத்தையும் நமது உறவுகளையும் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது,



| **Action Song : (Infants)** | **Group Dance (Child)** | |
|---|---|---|
| Cheenivilai | I | Vayalinkarai |
| Varuthattu | II | Nithiravilai |
| Nithiravilai | III | Varuthattu |

### Manjalumoodu Forane

**Bible Sentence Recitation : (Infants)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Ashlin Jenish .K, Marappady | I | Ashika, Marappady |
| Jino. J, Pallikonam | II | Affleen Shibora, Mukkuttukal |

**Speech (Child)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Arun V.S, Mukkuttukal | I | Lancy M.L, Mukkuttukal |
| Sanjoe Mon .S, Kaliyal | II | Ashin S.A, Kaliyal |

| **Action Song : (Infants)** | **Group Dance (Child)** | |
|---|---|---|
| Marappady | I | Malaicode |
| Malaicode | II | Muzhucode |
| Karode | III | Mukkuttukal |

### Thuckalay - Pilankalai Forane

**Bible Sentence Recitation : (Infants)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Jibson George, Nagercoil | I | Brishma, Nagercoil |
| Anto .M, Pilankalai | II | Athira .C.S, kattathurai |

**Speech (Child)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Bineesh, Paraicode | I | Geona George, Nagercoil |
| Jobin W.Fernandex, Nagercoil | II | Jomi Amala Justin, Thuckalay |

| **Action Song : (Infants)** | **Group Dance (Child)** | |
|---|---|---|
| Kattathurai | I | Nagercoil |
| Nagercoil | II | Kattathurai |
| Pilankalai | III | Pilankalai |

Fr. Joemon Mangalamadathil
Director

**Speech (Child)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| R. Bershay, Mankarai | I | Remitha, Killiyoor |
| Aprolin Tomi, Killiyoor | II | Adlin Stenika, Pilankarai |

| **Action Song : (Infants)** | | **Group Dance (Child)** |
|---|---|---|
| Soosaipuram | I | Mankarai |
| Mankarai | II | Soosaipuram |
| Pilankarai | III | Pilankarai |

### Padanthalumoodu Forane

**Bible Sentence Recitation : (Infants)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Sree Dave, Padanthalumoodu | I | Dharshiya .D.J, Athencode |
| Rithick, Annikkarai | II | Ashlin M.I, Kazhuvanthittai |

**Speech (Child)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Ananthu Rajan, Kazhuvanthittai | I | Adlin Japa.J.H, Palukal |
| Axil Jonix, Athencode | II | Arathi. S, Annikkarai |

| **Action Songs : (Infants)** | **Group Dance (Child)** | |
|---|---|---|
| Palukal | I | Palukal |
| Kazhuvanthittai | II | Padanthalumoodu |
| Padanthalumoodu | III | Athencode |

### Nithiravilai Forane

**Bible Sentence Recitation : (Infants)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Joffin Raj, Nithiravilai | I | Pradeepa Raj, Cheenivilai |
| Reegan, Cheenivilai | II | Arisha. V, Varuthattu |

**Speech (Child)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Joabus M. Kumar, Vayalinkarai | I | Shanimol .S, Cheenivilai |
| Abinesh .D.H, Varuthattu | II | Abina V.G, Vayalinkarai |



உண்மையான அழகிலிருந்தும், நேர்மையான அன்பிலிருந்தும், தூய்மையான உறவிலிருந்தும் வெளிவரும் மாசற்ற காற்றை சுவாசிக்க இந்த "மனிதாபிமானச் சூழலியல"நமக்கு பெரும் துணை நிற்கும்.

ஒருமுறை நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்டிருந்தேன், "உங்களுடைய செல்வம் எங்கே இருக்கிறது? உங்களுடைய உள்ளம் எதில் மகிழ்ச்சி கொள்கிறது? (பெல்ஜியத்தைச் சேர்ந்த இளைஞர்களோடு நடத்திய உரையாடலின் போது, 31 மார்ச் 2014). நம்முடைய இதயங்கள் உண்மையான செல்வத்தின் மீதோ போலியான செல்வத்தின் மீதோ பற்று வைக்கலாம், இதயமும், உண்மையான இளைப்பாறுதலைக் அடையலாம் இல்லையெனில், சோர்வுற்றதாய், கலக்கமுற்று நலிந்து காணப்படலாம். நமது வாழ்வில் நாம் பெறற்கரிய அரிய செல்வம் கடவுளன்றி வேறேதும் இருக்க முடியாது. இதைக்குறித்த தெளிவான அறிவு உங்களுக்கு இருக்கிறதா? இதை நீங்கள் முழுமையாக நம்புகிறீர்களா? கடவுளின் பார்வையில் நீங்கள் விலையேறப்பெற்றவர்கள் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? நீங்கள் எதுவாக இருக்கிறீர்களோ அந்நிலையிலேயே எவ்வித நிபந்தனைகளுமின்றி கடவுள் உங்களை அன்பு செய்து வரவேற்கிறார் என்பதை அறிந்திருக்கிறீர்களா? இந்த அறிவை நாம் மறக்கும் பட்சத்தில், மனிதர்களான நாம் புரியாத புதிராக மாறுகிறோம். காரணம் என்னவெனில், கடவுள் நம்மை எவ்வித நிபந்தனைகளுமின்றி அன்பு செய்கிறார் என்னும் உள்ளுணர்வு நமது வாழ்வுக்கு அர்த்தத்தைத் தருகிறது. இயேசு செல்வந்தரான இளைஞரோடு நடத்திய உரையாடல் உங்களுக்கு ஞாபகம் வருகிறதா? (மாற் 10: 17-22). "இயேசு அவ்விளைஞனை அன்பொழுக கூர்ந்து நோக்கினார்" என நற்செய்தியாளர் மாற்கு கூறுகிறார். மேலும், வாழ்வின் உண்மையான செல்வத்தை கண்டடைவதற்காக அவரைப் பின்தொடருமாறு அழைப்பும் விடுக்கிறார். எனதருமை இளைஞர்களே, இயேசுவின் அன்பொழுகும் பார்வை உங்களுள் ஒவ்வொருவருடைய வாழ்நாள் முழுவதும் விட்டு விலகாது பின்தொடரும் என நம்புகிறேன், அதற்காக செபிக்கிறேன்.

இளமைப்பருவம் என்பது அன்பு இதயங்களில் மலரும் காலம். அதே வேளையில், உண்மையான, அழகான விசாலமான அன்பிற்காக ஏங்கும் காலம். பிறரை அன்பு செய்வதும், பிறரால் அன்பு செய்யப்படுவதும் எழில் வாய்ந்தது, அதனுடைய ஆற்றல் வார்த்தைகளால் விளக்க முடியாது. அது மாபெரும் பொக்கிஷம். அதனால், அவ்வரிய பொக்கிஷத்தை, இழிநிலைக்குத் தள்ளாதீர்கள்; கெடுத்து அழிக்காதீர்கள். நாம் பிறரை நமது சுயநல நோக்கங்களுக்காக பயன்படுத்தும் போதும், இன்பம் அனுபவிப்பதற்கான பொருட்களாக தரம் தாழ்த்தும் போதும் அன்பு

இழிநிலைக்கு தள்ளப்படுகிறது, அப்பொக்கிஷம் ஆற்றலிழந்து சுமையாகிறது. இத்தகைய, எதிர்மறையான அனுபவங்கள் வழியாக இதயம் உடைகிறது, துயரம் தொற்றி பாடாய் படுத்த ஆரம்பிக்கிறது. ஆகையால், அன்பான இளம் செல்வங்களே, உண்மையான அன்பின் முன் பதறி நிற்காதீர்கள். இயேசு நமக்கு அறிவுறுத்தும், பவுலடியார் தெளிவுபடுத்தும் அன்பை உறுதியாய்ப் பற்றிக் கொள்வோம். அவ்வன்பு, "பொறுமைமிக்கது; நன்மை செய்யும்; பொறாமைப்படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது. அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது; மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும்" (1கொரி 13: 4-7).

அன்பு செய்வதற்காக நாம் கடவுளால் அழைக்கப்பட்டிருக்கிறோம். அன்பார்ந்த இளைஞர்களே, அவ்வழைப்பின் அழகை கண்டுணருங்கள். அன்பிற்குள்ளே அடங்கியிருக்கும் அடிப்படை காரணிகளான, அழகு, உறவு, நம்பிக்கை மற்றும் பொறுப்பு ஆகியவற்றை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுங்கள். அன்பை, காமத்திற்குள் சுருக்கி அதை இழிவு படுத்தும் பொதுமனநிலைக்குள் விழாமல் உங்களையே தற்காத்துக் கொள்ளுங்கள். 'இந்த பொழுதொன்றே நிஜமானது', அதனால் 'நல்லா அனுபவி' என்று விளம்பரப்படுத்தும் கலாச்சார பிறழ்வுகளை உள்வாங்கி, சுகபோகமே வாழ்வெனக் கொள்ளாதீர்கள். வாழ்நாள் பூராவும் பொறுப்பாய்க் கொள்ள வேண்டிய உறுதியான உறவுகளை ஏற்கத் தயங்காதீர்கள். உலகம் குறுகிய இன்பங்களின் வலை விரிக்கிறது. எனதருமை பிள்ளைகளே, நீங்கள் அலைகளுக்கு எதிராக நீந்தும் புரட்சியாளர்களாக மாற அழைக்கிறேன். நீங்கள் பொறுப்புடன் வாழ்வு நடத்த அருகதை அற்றவர்கள் என்றும், உண்மையான அன்பை உங்களால் செலுத்த முடியாது என்றும் இன்றைய கலாச்சாரம் உங்களை இழிவு படுத்துகிறது. தற்கால சுகங்களை அக்கலாச்சாரம் விளம்பிக்கொண்டிருக்கிறது. அதற்கு எதிராக நீங்கள் புரட்சி செய்யுங்கள். நான் உங்கள் மீது நம்பிக்கை வைக்கிறேன். எதிர்நீச்சல் போடும் தைரியம் உங்களுக்குள் வீறுகொண்டு எழட்டும். மகிழ்ச்சியாக இருக்க, தைரியம் கொள்ளுங்கள்.

இளைஞர்களே நீங்கள் துணிச்சல் மிக்கவர்கள்! சாகசக்காரர்கள்!! அன்பைக் குறித்து திருச்சபை கற்பிக்கும் படிப்பினைகளைக் குறித்த ஆழமான ஞானம் கொள்வீர்களெனில், கிறிஸ்தவம் உங்களுடைய சந்தோஷங்களைக் கெடுக்கும் உபாதையாகவும், நசுக்கும் சக்தியாகவும் பார்க்கும் மனநிலை மாறும். காரணம், உள்ளங்களை ஆக்கிரமித்து மகிழ்ச்சி நோக்கி இட்டுச்செல்லும் கடவுளின் வல்லமைமிகு அன்பை



# குழந்தை ஈசோ இயக்கம்

இறை இயேசுவில் அன்புக்குரிய குழந்தைகளே!

குழந்தை ஈசோ இயக்கம் அனைத்து பங்குகளிலும் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று நம்புகிறேன். நீங்கள் தருகின்ற அனைத்து ஒத்துழைப்புக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருடம் கலைப்போட்டிகள் 08.02.2015 அன்று ஆறுகாணி மறை வட்டத்திற்கானப் போட்டிகள் ஆறுகாணியிலும் மற்ற ஐந்து மறை வட்டங்களுக்கானப் போட்டிகள் 17.02.2015 அன்று படந்தாலுமூட்டிலும் வைத்து நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும், அவரை/அவர்களை ஆயத்தப்படுத்திய அனைத்து ஆனிமேட்டேர்ஸ் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் பாராட்டுக்கள்

பரிசு பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு :

## Arukany Forane

**Bible Sentence Recitation : (Infants)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Jobin.R, Pathukany | I | Abhina J. Shajan, Mezhacode |
| Bercin, Arukany | II | Bincy, Arukany |

**Speech (Child)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Sajish, Pathukany | I | Jincy James, Netta |
| Abilash, Netta | II | Fabinshiya, Arukany |

| **Action Song (Infants)** | | **Group Dance (Child)** |
|---|---|---|
| Mezhacode | I | Netta |
| Pathukany | II | Pathukany |
| Arukany | III | Arukany |

## Soosaipuram Forane

**Bible Sentence Recitation : (Infants)**

| *Boys :* | *Prize* | *Girls :* |
|---|---|---|
| Alin Jino, Killiyoor | I | Rekshana, Pilankarai |
| Rishanth S.M, Mankarai | II | Berlin Steny, Mankarai |

### Soosaipuram Forane

| | | | |
|---|---|---|---|
| 1. | Soosaipuram | 17 | I |
| 2. | Thackalivilai | 17 | I |
| 3. | Mankarai | 8 | II |
| 4. | Palappallam | 8 | II |
| 5. | Killiyoor | 1 | III |
| 6. | Pilankarai | 1 | III |

**மறை மாவட்ட விவிலிய வினாடிவினாப் போட்டி**

2014-2015 ம் ஆண்டு மறைக்கல்வி மாணவர்களுக்கான மறை மாவட்ட அளவிலான விவிலிய வினாடி வினாப்போட்டிகள் மார்ச் 1 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு படந்தாலுமூட்டில் வைத்து நடத்தப்பட்டது. வகுப்பு 5 முதல் 12 வரை உள்ள மாணவர்களில் பங்களவில் ஒவ்வொரு வகுப்பிலும் முதலிடம் பெற்ற மாணவ மாணவிகள் பங்கு பெற்றனர்.

**தகவல்கள்**

மார்ச் மாதம் 21-ம் தேதி நடைபெற இருந்த தலைமையாசிரியர்களின் கூடுகையும், 22-ம் தேதி நடைபெற இருந்த வகுப்பு 1/2 முதல் வகுப்பு 9 வரை உள்ள மாணவ, மாணவிகளுக்கான இரண்டாம் பருவத் தேர்வும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும். நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

அருட்தந்தை **ஜெஸ்டின் செறுவேலில்**

இயக்குநர்.

---

**Pope Francis**
**TWEETS**



**Pope Francis** @Pontifex Feb 28
Jesus intercedes for us each day. Let us pray: Lord, have mercy on me; intercede for me!



**Pope Francis** @Pontifex Feb 21
There is no sin that God cannot pardon. All we need to do is ask for forgiveness.



திருச்சபை உங்கள் முன்வைக்கிறது.

**3. "..ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்"**

ஒவ்வொரு மனிதருடைய உள்ளத்திலும், "எனது முகத்தை நாடு" (திபா 27:8) எனும் ஆண்டவரின் கட்டளை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் அதே வேளையில், நாம் பலவீனப் பாவிகள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எடுத்துகாட்டாக திருப்பாடலில் நாம் வாசிக்கிறோம், “ஆண்டவரின் மலையில் ஏறத் தகுதியுள்ளவர் யார்? அவரது திருத்தலத்தில் நிற்கக் கூடியவர் யார்? கறைபடாத கைகளும் மாசற்ற மனமும் உடையவர்” (திபா 24: 3-4). ஆனால், நாம் எக்காரணத்தைக் கொண்டும் உள்ளம் சோர்ந்து போகக் கூடாது. காரணம் மனிதர்களைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் முயற்சிகளை கடவுளே மேற்கொள்கிறார். இதை திருவிவிலியமும் வரலாறும் நமக்கு உணர்த்துகிறது.

கடவுளின் குரலை மக்களுக்கு எடுத்துரைப்பதற்கான அழைப்பை எசாயா கேட்ட வேளையில் அஞ்சி நடுங்குகிறார், “ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்” (எசா 6: 5) எனப் பதறுகிறார். ஆயினும் கடவுள் அவரைத் தூய்மைப்படுத்துவதற்காக வானதூதரை அனுப்புகிறார். வானதூதர் அவருடைய உதடுகளைத் தொட்டு “உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது; உன் பாவம் மன்னிக்கப்பட்டது” என்றார் (எசா 6: 10). கெனசரேத்து ஏரிக்கரையில் வைத்து முதல் சீடர்களை அழைக்கும் வேளையில், அற்புதகரமான மீன்பிடிப்பைக் கண்ட பேதுரு, “ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்” (லூக் 5: 8) என்றார். ஆனால் இயேசுவோ, “அஞ்சாதே; இதுமுதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” (10) என்றார். மேலும், சீடர்களுள் ஒருவர், “ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும்” என்ற போது, அவர் கூறினார், “என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்” (யோவா 14: 8-9).

வாழ்வின் எந்நிலையில் இருந்தாலும், ஆண்டவரைக் காண்பதற்கான அழைப்பு உங்களுள் ஒவ்வொருவரை நோக்கியும் எழுந்த வண்ணம் உள்ளது. இயேசு கிறிஸ்துவைக் காண வேண்டும் என்னும் ஆசை நிதமும் உங்களை இயக்கட்டும். அது இயலாது எனில், அவர் உங்களைக் கண்டடைவதற்காக உங்களுடைய உள்ளங்களையாவது திறந்து வையுங்கள். நாம் எல்லாரும் பாவிகள், ஆகையால், ஆண்டவர் அளிக்கும் தூய்மை நமக்குத் தேவைப் படுகிறது. ஆண்டவரால் நாம் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அதற்காக நாம் பெரிய காரியங்களைச் செய்யத் தேவையில்லை, மாறாக, நமது வருகைக்காக இரும் கரம் நீட்டி காத்திருக்கும் இயேசுவை நோக்கி சிறு அடி எடுத்து வைத்தால் போதுமானது. அம்முயற்சி, ஒப்புரவு அருளடையாளம்

பெற்றுக்கொள்ளுதலில் அடங்கியுள்ளது. அது கருணைக்கடலாம் ஆண்டவரின் திருமுக தரிசனத்தை அளிப்பதோடு மன அமைதியும் இதயத்தூய்மையும் அளிக்கும்.

எனதருமை இளைஞர்களே, ஆண்டவர் நம்மை சந்திக்க ஆசைப்படுகிறார், அவரை நாம் காண வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இது எங்ஙனம் இயலும் என நீங்கள் என்னைக் கேட்கலாம். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்பெயின் நாட்டில் பிறந்த ஆவிலா நகரத்துத் தெரசா சிறு வயதாக இருக்கும் போது பெற்றோரிடம் "எனக்கு கடவுளைக் காண வேண்டும்" என்று கூறினார். "கடவுளால் நாம் அதிகமாக அன்புச் செய்யப்படுகிறோம் என்னும் உணர்வை, செபம் வழியாக அவரோடு கொள்ளும் நெருங்கிய நட்புறவிலிருந்துப் பெற்றுக்கொள்ளலாம்" என பிற்காலத்தில் தமது சுயசரிதையில் கூறுகிறார். அதனால், நான் உங்களிடம் கேட்க விரும்புவெதல்லாம், நீங்கள் செபிக்கிறீர்களா? என்பதே. ஒரு நண்பரிடம் பேசுவது போல, இயேசுவிடமும், தந்தைக் கடவுளிடமும் தூய ஆவியிடமும் உங்களால் பேச முடியும், என்பது உங்களுக்குத் தெரியுமா? இயேசு சொல்லளவில் மட்டும் நண்பர் அல்ல மாறாக, மற்றனைவரை விடவும் மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த நெருக்கமான நண்பர். பிரான்ஸ் நாட்டில் ஆர்ஸ் நகர் பங்கு கோவிலில் பங்குத் தந்தையாக இருந்த புனித மரிய வியானியிடம், அப்பங்கு மக்களுள் ஒருவர், செபத்தைக் குறித்து அப்புனிதரிடம் பின்வருமாறு கூறினார், "நான் நற்கருணைப் பேழையின் முன் செபிக்கும் போது, நான் அவரைப் பார்க்கிறேன், அவர் என்னைப் பார்க்கிறார்" (கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி 2715).

அன்றாடம் திருவிவிலியம் வாசிக்க நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். காரணம் அதன் வழியாக நீங்கள் கடவுளைக் காண்பீர்கள். அப்பழக்கம் உங்களுக்கு இல்லையெனில், இனிமேல், தொடங்குங்கள். முதலில் நற்செய்தி நூல்களை வாசியுங்கள். அன்றாடம் ஓரிரு வரிகள் வாசித்தாலே போதுமானது. கடவுள் உங்கள் இதயங்களில் பேச அனுமதியுங்கள், "உங்களுடைய பாதைக்கு அவர் வெளிச்சமாகட்டும்" (திபா 119: 105). உங்களுடைய சகோதரர் சகோதரர்களின் முகங்களிலும் கடவுளைக் காண இயலும். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களான, ஏழைகளில், வறுமையில் வாடுவோரில், தாகமாய் இருப்போரில், அந்நியர்களில், நோயாளிகளில், சிறையில் இருப்போரில் கடவுளின் முகத்தைக் காண இயலும் (மத் 25: 31-46). நீங்கள் இவ்வனுபவத்தைப் எப்போதாவது பெற்றதுண்டா? இறையாட்சியைக் குறித்த இரகசியம் நமக்கு கைவசம் ஆக வேண்டுமெனில், நாமும் ஏழைகளுள் ஒருவர் என்பதை ஏற்றாக வேண்டும். தேவையில் உழல்வோரைக் காணும் போது, அவர்களின்



**Arukany Forane**

| Sl.No. | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1. | Arukany | 27 | I |
| 2. | Pathukany | 16 | II |
| 3. | Mezhacode | 5 | III |
| | **Manjalumoodu Forane** | | |
| 1. | Mukkuttukal | 18 | I |
| 2. | Manjalumoodu | 16 | II |
| 3. | Kaliyal | 10 | III |
| 4. | Muzhucode | 6 | |
| 5. | Malaicode | 1 | |
| 6. | Marappady | 1 | |
| | **Nithiravilai Forane** | | |
| 1. | Nithiravilai | 19 | I |
| 2. | Vayalinkarai | 13 | II |
| 3. | Varuthattu | 6 | III |
| 4. | Munchirai | 5 | |
| 5. | Cheenivilai | 1 | |
| | **Padanthalumoodu Forane** | | |
| 1. | Annikkarai | 22 | I |
| 2. | Palukal | 16 | II |
| 3. | Thettiyode | 10 | III |
| 4. | Athencode | 3 | |
| | **Thuckalay- Pilankalai Forane** | | |
| 1. | Kattathurai | 18 | I |
| 2. | Pilankalai | 16 | II |
| 3. | Chenamcode | 6 | III |
| 4. | Kaisalavilai | 5 | |
| 5. | Nagercoil | | |
| 6. | Kulasekharam | 3 | |
| 7. | Paraicode | 1 | |

| | | | |
|---|---|---|---|
| 19. | Muzhucode, St. Thomas | 5 | 14 |
| 20. | Munchirai, St. George | 5 | 14 |
| 21. | Padanthalumoodu, Sacred Heart | 5 | 14 |
| 22. | Palukal, St. Thomas | 5 | 14 |
| 23. | Pathukany, St. Thomas | 3 | 15 |
| 24. | Cheenivilai, Amala Maria | 3 | 15 |
| 25. | Thettiyode, St. Pauls | 3 | 15 |
| 26. | Athencode, Maria Goretti | 3 | 15 |
| 27. | Kaisalavilai, St. Xaviers | 3 | 15 |
| 28. | Kattathurai, St. Michael's | 3 | 15 |
| 29. | Pilankarai, Loretto Matha | 3 | 15 |
| 30. | Mezhacode, St. Francis Assisi | 2 | 16 |
| 31. | Bengiri, St. Benedict | 1 | 17 |

**மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைப் போட்டிகள்**

2014 - 2015 ம் ஆண்டு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழாப் போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 26 திங்கள்கிழமை படந்தாலுமூடு மறைவட்ட ஆலயவளாகத்தில் வைத்து படந்தாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை. ஷோஜோ இருபத்தஞ்சில்சிற அவர்களின் தலைமையில் காலை 9.00 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. காலையில் மஞ்சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு ஆகிய மறைவட்டங்களுக்கும் மதியம் 1.00 மணிக்கு மறைமாவட்ட அளவில் ஆசிரியர்களுக்கான விவிலிய வினாடிவினாப் போட்டியும், மதியம் 1.30 மணி முதல் ஆறுகாணி, சூசைபுரம், தக்கலை-பிலாங்காலை ஆகிய மறைவட்டங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விவரம் பின்வருமாறு :



உணர்வுகளை மனதினில் ஏற்று உதவும் இதயம் அவசியம். இயேசு விரும்பும் தூய உள்ளத்தோர் இத்தகையோரே.

செபம் வழியாக இயேசுவை சந்தித்து, விவிலிய வாசகம் வழி அவர் மொழி கேட்டு, சகோதர அன்பில் நிலைக்கும்போது நீங்கள் ஆண்டவரைக் குறித்த அறிவையும், நீங்கள் யார் என்ற சுய அறிவையும் பெற்றுக் கொள்வீர்கள். "இறையழைத்தல்"என்பது காலாவதியாகிப் போன பழைய வாழ்க்கை முறைமை என நினைத்து ஒதுக்க வேண்டாம். அது உண்மை அல்ல. திருச்சபை சமூகங்கள் இறையழைத்தலைக் குறித்து தீவிரமாக சிந்திக்கவும், செபிக்கவும் அழைக்கிறேன். நற்செய்தி பறைசாற்றுதலுக்கு குடும்பங்களுக்கு இருக்கும் முக்கியமானப் பொறுப்பைக் குறித்த அறிவைப் பெற்றுக் கொள்வோம். குருத்துவ வாழ்வுக்கும் துறவற வாழ்வுக்குமான அழைப்பை நீங்கள் பெற்றிருக்கீர்களா என நீங்கள் உள்ளார சிந்தித்து செபித்துத் தீர்மானம் எடுங்கள். இயேசுவை முழுமையாக வாழ்வில் ஏற்று அவருக்காகவும் அவரது திருச்சபைக்காகவும் தங்களை அர்ப்பணிக்கும் இளைஞர்கள் எவ்வளவு அழகு பொருந்தியவர்கள் தெரியுமா? உங்களைக் குறித்த கடவுளின் திட்டத்தை தூய உள்ளத்துடன் தேடுங்கள், அவரது அழைப்பு உள்ளே உணருகிறீர்களானால், அவ்வாழ்வை சவாலாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஆண்டவரின் அழைப்புக்கு நீங்கள் "ஆம்" என்பீர்களென்றால், நீங்கள் ஆண்டவரின் இதயத்திற்கு இணங்கிய மாற்றுச் சமூகத்திற்கான விதைகளாக திகழ்வீர்கள். கடவுளின் திருவுளமே மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதை மறக்க வேண்டாம்.

**4. கிராக்கோவ் நோக்கியப் திருப்பயணம்**

"தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத் 5: 8). அன்பான இளைஞர்களே, இந்நற்செய்திப் பேறு உங்கள் இதயத்தோடு நேருக்கு நேராகப் பேசுகிறது, மேலும் இதுவே உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அதனால் மீண்டும் ஒருமுறை கூறுகிறேன், மகிழ்ச்சியாய் வாழ தைரியம் கொள்ளுங்கள்.

போலந்து நாட்டில் உள்ள கிராக்கோவில் 2016 ஆண்டு நடைபெற உள்ள உலக இளைஞர் தினத்திற்கான கடைசிக் கட்ட தயாரிப்புகள் இவ்வாண்டைய இளைஞர் தினம் தொடங்கி நடக்க இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் புனித இரண்டாம் ஜாண் பால் திருத்தந்தை உலக இளைஞர் தினத்தை தொடங்கி வைத்தார். உலகின் பல்வேறு கண்டங்களைச் சார்ந்த இளையோரை பேதுருவின் வாரிசான திருத்தந்தையின் தலைமையில் ஒன்றாகக் கூட்டும் நிகழ்வாக, திருப்பயணம் என்னும் பெயரில் இது ஆரம்பிக்கப்பட்டது. இது, கடவுளின் ஆசியால் மாபெரும் எழுச்சியாய் உலக அளவில் உருப்பெற்று, கிறிஸ்துவுக்கான

மாபெரும் சாட்சியமாக மாறி இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் மனங்களில் இந்த உலக இளைஞர் தினம் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்களுக்காக ஆண்டவருக்கு நன்றி சொல்வோம். இயேசுவே வழி, வாழ்வு, ஒளி என ஏராளமானோர் இத்திருப்பயணம் மூலம் கண்டுணர்ந்திருக்கிறார்கள். திருச்சபை அனைவருக்கும் அன்னை என்பதை பல்லாயிரக்கணக்கானோர் உணர்ந்திருக்கின்றனர். இதனால் பல மனமாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, பலர் இறையழைத்தலை ஏற்றிருக்கிறார்கள். உலக இளைஞர் தினத்திற்கான பாதுகாவலர், புனித இரண்டாம் ஜாண் பால் திருதந்தை நமக்காகப் பரிந்து பேசட்டும். அவரின் பரிந்துரையால் அடுத்த ஆண்டைய நமது திருப்பயணம் பல மாற்றங்களை திருச்சபையில் ஏற்படுத்தட்டும். என்றும் கன்னியான, அருள்நிறைந்த, எழில் பொருந்திய, உள்ளத்திலே மாசுமறு அற்ற, நமது தாய் மரியாள் தம் கருணைக்கண் நம் மேல் பதிக்கட்டும். அவளது அரவணைக்கும் கரங்கள் நம்மைப் பின்தொடரட்டும்.

ஜனவரி 31, 2015 அன்று வத்திக்கானிலிருந்து வெளியிடப்பட்டது.

## அருட்சகோதரர்களிடமிருந்து...

### மங்கலப்புழ

மங்கலப்புழ அருட்சகோதரர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர். அருட்சகோ. சாமுவேல் மற்றும் அருட்சகோ. அனில்ராஜ் ஆகியோர் பிப். 12 அன்று நடைபெற்ற இசைமாலை நிகழ்ச்சியில் சிறப்பாக பாடினர். மங்கலப்புழ குருத்துவக் கல்லூரியின் புதிய அதிபராக பாலக்காடு மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை. மாத்யூ இல்லத்துப்பறம்பில் பொறுப்பேற்றுள்ளார். அன்னாரின் பணி சிறக்க வாழ்த்துகிறோம். மேலும் பிப். 28 அன்று தேர்வுகள் தொடங்கி மார்ச் 14 அன்று முடிவடைகின்றன. மார்ச் 15 முதல் விடுமுறை தொடங்குகிறது. அருட்சகோ. சாமுவேல் தன் பெயர் கொண்ட புனிதரின் திருநாளைக் கொண்டாடினார்.

### வடவாதூர்

வடவாதூர் குருத்துவக் கல்லூரியின் புதிய அதிபராக அருட்தந்தை. ஜோய் அனியாடன் அவர்கள் வரும் கல்வியாண்டு முதல் பணியாற்ற உள்ளார். பிப். 20 அன்று தொடங்கிய தேர்வு மார்ச் 6 அன்று நிறைவடையும். அதன் பின், 4 திருத்தொண்டர்களுக்கும் திருப்பட்டத்திற்கு ஆயத்தமாக 4 நாட்கள் தியானம் நடைபெறுகிறது. தொடர்ந்து மார்ச் 10 முதல் விடுமுறை தொடங்குகிறது.



## நற்செய்தி நிலையம்

"நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள்" (கொலோ. 3:12) அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்

### மறைமாவட்ட கலைப்போட்டிகள்

மறைமாவட்ட அளவில் நடந்த விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் மற்றும் இலக்கியப்போட்டிகளில் வெற்றி பெற்று அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தர வரிசைப் பட்டியல்

| SN. | Name of the Sunday School | Points | Rank |
|---|---|---|---|
| 1. | Nithiravilai, Jayamatha | 57 | 1 |
| 2. | Manjalumoodu Little Flower | 56 | 2 |
| 3. | Vayalinkarai St. Antony's | 26 | 3 |
| 4. | Nagercoil, St. Alphonsa | 23 | 4 |
| 5. | Kaliyal, St. Mary | 22 | 5 |
| 6. | Mukkuttukal, Holy Family | 21 | 6 |
| 7. | Malaicode, Holy cross | 20 | 7 |
| 8. | Pilankalai, Little Flower | 20 | 7 |
| 9. | Killiyoor, Deva Matha | 20 | 7 |
| 10. | Soosaipuram, St. Joseph | 18 | 8 |
| 11. | Kazhuvanthittai, St. Martin De Porus | 16 | 9 |
| 12. | Arukani, Holy Family | 16 | 9 |
| 13. | Annikkarai, St. Mathew | 12 | 10 |
| 14. | Palappallam, Christ the king | 11 | 11 |
| 15. | Varuthathu, St. Xaviers | 9 | 12 |
| 16. | Mankarai, St. James | 8 | 13 |
| 17. | Netta, St. Thomas | 5 | 14 |
| 18. | Anamukham, Loretto Matha | 5 | 14 |